FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319433

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **2/2026** Date: நாள் **05.06.2026**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018** Sections பிரிவுகள்: **7**
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: **Bharatiya Nagarik Suraksha Sanhita** Sections பிரிவுகள்: **106**
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **04.06.2026** Date to : நாள் வரை **04.06.2026**
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் **15.30 hrs** Time to : நேரம் வரை **21.00 hrs**
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **05.06.2026** Time நேரம் **1500 hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - II** Time நேரம் **1500 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **கணினி தட்டச்சு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **சுமார் 70 கி.மீ. தென்மேற்கு**
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி **1ம் எண் இணை சார் பதிவாளர் அலுவலகம் விருத்தாசலம்**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **ஹ.நசிமா பானு**
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் **ஆய்வுக்குழு ஆய்வாளர்**
   (g) Address : முகவரி **மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   பெ.தர்மராஜ், உதவியாளர், பொறுப்பு சார் பதிவாளர், விருத்தாசலம் சார் பதிவகம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 05.06.2026 ஆம் தேதி காலை 15.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருமதி. ஹ.நசிமா பானு, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் ஹ.நசிமா பானு, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.A/290/2026 நாள் : 05.06.2026, ஐயா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – விருத்தாசலம் 1–ஆம் எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட

(தொடர்ச்சி பக்கம்–3)

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

ஹ. நசிமா 5/6/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

05/06/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 05-06-2026 at. 16.30 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. ANBALAGAN, Inspector
Rank: நிலை ULE, No. எண் 1000

ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் (இருப்பு) ஆய்வுக்குழு ஆய்வாளராகிய ஹ.நசிமா பானு ஆகிய நான் 04.06.2026ந் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்த போது, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் 1–ஆம் எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவுக்காக அலுவலகம் வரும் பொதுமக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் லஞ்ச பணம் பெற்று வைத்துள்ளார் என்ற ரகசிய தகவல் எனக்கு கிடைத்தது. பின்னர் உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 04.06.2026 ஆம் தேதி மாலை சுமார் 12.30 மணிக்கு சென்று அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் பி.அன்பழகன் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி விருத்தாசலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 3.30 மணிக்கு மேல் சென்றால் அங்கு விருத்தாசலம் சார் பதிவாளர் அவர்களுக்கு கொடுக்க உள்ள மற்றும் ஏற்கனவே பெற்று வைத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் திரு.பி.அன்பழகன் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் திரு.பி.அன்பழகன் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் 04.06.2026 ஆம் தேதி மதியம் சுமார் 01.30 மணிக்கு அரசு வாகனத்தில் புறப்பட்டு வடக்கு தெற்காக செல்லும் கடலூர் – சேலம் தேசிய நெடுஞ்சாலையின் கிழக்கு புறமாக அமைந்துள்ள விருத்தாசலம், ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் விருத்தாசலம் சார் பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 03.30 மணிக்கு மேற்கு பார்த்தவாறு உள்ள நுழைவு வாயில் வழியாக சென்று, அலுவலக கட்டிட வளாகத்திற்குள் சென்று பிரதான நுழைவு வாயிலை அடைத்து பாதுகாப்பிற்கு காவலரை நியமித்து பின்னர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். மேற்படி அலுவலகத்தில் கீழ் தளத்தில் இயங்கி வரும் 1–ஆம் இணை சார்பதிவாளர் விருத்தாசலம் அலுவலகத்திற்கு உள்ளே சென்றவுடன் வராண்டாவிற்கு கிழக்கு புறத்தில் உள்ள வாயிலின் வழியாக சென்றவுடன் கண்ணாடி சுவர் போடப்பட்ட அறையில் கிழக்குபுறத்தில் மேற்கு பார்த்தவாறு இருக்கையில் அமர்ந்திருந்த சார் பதிவாளர் அவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் சார் பதிவாளர் அவர்களை

5/6/2026

விசாரித்தபோது அவர் தனது பெயர் பெ.தர்மராஜ், வயது 39, த/பெ பெரியசாமி, உதவியாளர், தற்போது விருத்தாசலம் சார் பதிவகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்யபோகும் விவரத்தை அவர்களிடம் தெரிவித்து, சோதனைக்கு உடனிருந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அங்கிருந்தவர்கள் முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை தெரியப்படுத்தினோம். மேற்படி விருத்தாசலம் சார்பதிவாளர் அலுவலகமானது தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி மேற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் வராண்டா சுமார் 10க்கு 50 அடி நீள அகலமுள்ளது. அதனையடுத்து சார்பதிவாளர் இருக்கை அமைந்துள்ள ஹாலானது 22க்கு 28 அடி நீள அகலமுள்ளது. சார் பதிவாளர் திரு.பெ.தர்மராஜ் அவர்களிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் இருப்பு பதிவேட்டினை கேட்க அவர்கள் அப்பதிவேட்டை ஒப்படைத்தார். பின்னர் சார் பதிவாளர் திரு.பெ.தர்மராஜ் அவரது மேல் சட்டை பாக்கெட்டினை சோதனை செய்ய அதில் ரூ.1360/– (500x2, 100x3, 50x1, 10x1) இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க தான் காலை அலுவலகம் வரும் போது எடுத்து வந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் 04.06.2026 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சார்பதிவாளர் இருக்கைக்கு வலதுபுறம் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த திரு.A.ரமேஷ், த/பெ.ஆறுமுகம், Data Entry Operator (TCS –ZICMA) என்று தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.470/–(100x4, 50x1, 10x2) இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க தான் காலை அலுவலகம் வரும் போது எடுத்து வந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் 04.06.2026 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி ஹாலின் வடமேற்கு திசையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் திருமதி கொ.தாரகை, (வயது 29), க/பெ.வசந்த், இளநிலை உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரது கைப்பையை சோதனை செய்ய அதிலிருந்து ரூ.540/– (200x2, 100x1, 20x1, 10x2) இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க தான் காலை அலுவலகம் வரும் போது எடுத்து வந்ததாக தெரிவித்தார்.

05/06/2026

அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் 04.06.2026 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலின் மேற்கு திசையில் இருந்த கணினி அறையில் இருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் சொ.ராஜேஷ் (வயது 35), த/பெ. சொக்கலிங்கம் என்றும் தான் கேமரா ஆப்பரேட்டராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.200/– (200X1) பணம் இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க தான் காலை அலுவலகம் வரும் போது எடுத்து வந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் 04.06.2026 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலின் வெளிப்பகுதியில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் கே.சேகர் (வயது 59), த/பெ. கலியன் என்றும் தான் அலுவலக உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.100/– (100X1) பணம் இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க தான் காலை அலுவலகம் வரும் போது எடுத்து வந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் 04.06.2026 ஆம் தேதியில் ரூ.500/– என பதிவு செய்யப்பட்டிருந்ததால், குறைந்துள்ள ரூ.400/– பணம் பற்றி கேட்க, அவர் ரூ.400/– மருந்து வாங்கிவட்டதாக தெரிவித்து ரூ.401/–க்கு உண்டான ரசீது காண்பித்தார். அவரது விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால், ரூ.100/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் E.பரிமளா, க/பெ. ஏழுமலை, களமருதூர், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் என்றும், மகளிர் சுய உதவிக்குழு பதிவு செய்வது DR அலுவலகத்திற்கு சென்றுவிட்டு கீழே வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது மணிபர்சில் ரூ.9,500/– (500x19) பணம் இருந்தது. மேற்படி பணம் குறித்து கேட்டபோது, GRT நகைக்கடையில் மாத தவணை கட்டுவதற்காக கொண்டுவந்தாக கூறி GRT நகைக்கடையின் அட்டையை காண்பித்தார். அவரது விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால், அப்பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் S.சாகுல் ஹமீது, த/பெ. சபிருல்லா, புதுப்பேட்டை மாரியம்மன் கோயில் தெரு, விருத்தாசலம் என்று தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது மணிபர்சில் ரூ.10,000/– (500x20) பணம் இருந்தது. மேற்படி பணம் குறித்து கேட்டபோது, தான்

05/06/2026

MOD ரத்து செய்வதற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும், தான் ஸ்ரீராம் பைனான்சில் collection staff ஆக பணிபுரிந்து வருவதாகவும், தனது கஸ்டமர் திரு.மயில்வாகனம் என்பவரது பணம் ரூ.10,000/– வைத்திருந்தாகவும் தெரிவித்து ரசீது காண்பித்தார். அவரது விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால், அப்பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலின் தெற்குபுறத்தில் உள்ள அறையை சோதனை செய்ய சோதனை செய்ய அதில் நான்கு மர அலமாரி இருந்தது. இரண்டாவது இருந்த அலமாரியை சோதனை செய்ய அதில் இரண்டாவது அடுக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு பின்னால் ஒரு கலர் கட்டு கட்டாக பணம் இருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்க்க (500 x 300) ஆக மொத்தம் ரூ.1,50,000/– இருந்தது. மேற்படி பணம் குறித்து சார் பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்களிடம் விசாரிக்க அப்பணம் பற்றி தங்களுக்கு தெரியாது என்று கூறிவிட்டனர். மற்ற அலமாரிகளை சோதனை செய்ய அவற்றில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அப்பணம் குறித்து யாரும் உரிமை கோராததால் மேற்படி பணம் பதிவுக்கு வரும் பொது மக்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் ஆகியோரிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.1,50,000/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வு சோதனையில் கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,50,000/– (500x300) மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், விருத்தாசலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 1) 1–ம் எண் இணை சார்பதிவாளர், விருத்தாசலம், தனி நபர் ரொக்கப் பதிவேடு – 2026 (2) தொகுதி எண்.28, 13.01.2026 முதல் பராமரிக்கப்படும்தனி நபர் பண இருப்புப் பதிவேடு (3) தொகுதி எண்.28, 01.01.2026 முதல் பராமரிக்கப்படும் வருகைப் பதிவேடு (4) 04.06.2026 ஆம் தேதி விருத்தாசலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் பட்டியல் ஆகியவை மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.தர்மராஜ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜரை சம்பவ இடத்திலேயே 04.06.2026ந்தேதி மாலை சுமார் 03.30 மணிக்கு துவக்கப்பட்டு இரவு சுமார் 09.00 மணிக்கு முடிக்கப்பட்டது. 04.06.2026ந்தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.1,50,000/–, (1) திரு.பெ.தர்மராஜ், உதவியாளர், (பொறுப்பு) சார்பதிவாளர், விருத்தாசலம் சார்பதிவகம் என்பவரது வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார்

05/06/2026

செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் பெ.தர்மராஜ், வயது 39, த/பெ பெரியசாமி, உதவியாளர், பொறுப்பு சார் பதிவாளர், விருத்தாசலம் சார் பதிவகம் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் ---- (ஹ.நசிமா பானு) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.

Madam Submitted,

Received the above computer typed complaint on 05.06.2026 at about 15.00 hours, hence I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption Cr.No.2/2026, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and 106 BNSS on 05.06.2026 at 16.00 hours. sd/- xxxx 05/06/2026 (P.ANBALAGAN), Inspector of Police, V&AC, Cuddalore.

05/06/2026
(P. ANBALAGAN)
Inspector of Police,
V&AC, Cuddalore